
# சர்வம் ப்ரஹ்ம மயம்!



நூல் மூலம் — சமஸ்க்ருதம்
விளக்கம் — தமிழ்

தெளிவுரை:— கி. குரு வெங்கட சுப்ரமணியம்


ஸ்ரீ மாத்ரே நம:
ஸ்ரீ பிதரே நம
ஸ்ரீ குருப்யோ நம:
ஓம் நம பரமாத்மநே நம:

வேதங்களையும், வேதாந்தங்களையும் கற்றுத் தந்த குருமார்களுக்கு எனது மனமார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த படைப்புக்கு என்னை ஊக்குவித்த **“எனது மரியாதைக்குரிய குரு ஸ்ரீ சுவாமி பிரபஞ்சநாதன்”** ஐயா அவர்களின் பாதத்தில் இப்பணியை சமர்ப்பிக்கிறேன்.

ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர் அவர்களின் புகழ்பெற்ற பாடலான **"சர்வம் பிரம்ம மயம்"** பாடலுக்கு அர்த்தத்தை எழுத வாய்ப்பளித்ததற்காக அவரை வணங்குகிறேன்.

பணிவுடன்
கி. குரு வெங்கட சுப்ரமணியம்





# சர்வம் பிரம்ம மயம்

ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரா 18 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டின் கும்பகோணத்திற்கு அருகில் வாழ்ந்த ஒரு துறவி, கர்நாடக இசையின் இசையமைப்பாளர் மற்றும் அத்வைத தத்துவஞானி ஆவார்.

அவரது சில இசையமைப்புகள் மட்டுமே எஞ்சியுள்ளன, அவை கர்நாடக இசையின் சிறந்த பாடல்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அத்வைத தத்துவஞானியுமான ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திராவின் பிரபலமான பாடல் **"சர்வம் பிரம்ம மயம்"** இந்த பாடலில் அவர் தனது இருப்பை தெளிவாக விளக்கியுள்ளார்.

**பாடல் - சமஸ்கிருத வரிகள்**

சர்வம் பிரம்ம மயம் ரே ரே ||
கிம் வசநீயம் கிம் அ வசநீயம்
கிம் ரசநீயம் கிம் அ ரசநீயம் || 1

கிம் படநீயம் கிம் அ படநீயம்
கிம் பஜநீயம் கிம் அ பஜநீயம் || 2

கிம் போ3த்தவ்யம் கிம் அ போ3த்தவ்யம்
கிம் போக்தவ்யம் கிம் அ போக்தவ்யம் ||3

ஸர்வத்ர ஸதா ஹம்ஸ தியானம்
கார்தவ்யம் போ முக்தி நிதானம் ||4

சர்வம் பிரம்ம மாயம் ரே ரே





| பாடலின் விளக்கம் (தமிழில்) | படைப்பின் விளக்கம் |
|---|---|

**படைப்பு இறைவ(எ)ன் மயம் ரே ரே ||**

எது பேசப்பட்டதோ எது பேசப்படாததோ

எது எழுதப்பட்டதோ எது எழுதப்படாததோ || 1

எது கற்கப்பட்டதோ எது கற்கப்படாததோ


எது பாடப்பட்டதோ எது பாடப்படாததோ || 2

எது கற்பிக்கப்பட்டதோ எது கற்பிக்கப்பட்டதோ

எது அனுபவிக்கப்பட்டதோ எது அனுபவிக்கப்பட்டதோ || 3

எல்லாவற்றிலும் எப்போழுதும் ஹம்ச தியானம் (**நான் அதுவாகவே இருக்கிறேன்)** இதுவே முக்திக்கு அழைத்துச் செல்லும் பாதை || 4

**படைப்பு இறைவ(எ)ன் மயமே ரே ரே ||**



# எல்லாமாகிய படைப்பு விரிகிறது .... **படைப்பின் பருவெளிபாடு**

- படைப்பு
  - உயிரினங்கள்/ சேதன வஸ்து
    - உணர்வு/அறிவு
    - சக்தி/மனம்
    - உபாதி/உடல்



பஞ்சீகரணம் என்ற செயல்முறையால், பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உடல்களை உருவாக்கிகொண்டு, உணர்வு தனது அறிவை மனதின் மூலம் **வெளிப்பட்ட** நிலை **“சேதன”** வஸ்து என வேதாந்த சாஸ்திரம் கூறுகிறது.

குறிப்பு: கூடுதல் விவரங்களுக்கு ஸ்ரீ பிரபஞ்சநாதன் ஐயா அவர்கள் எழுதிய “பஞ்சீகரணம்” பாடத்தைப் பார்க்கவும்.

| | சக்தி/மனம் | உபாதி/உடல் |
|---|---|---|
| உணர்வு | ஒரு அறிவு | மரங்கள், தாவரங்கள் |
| | இரண்டு அறிவு | புழுக்கள், பூச்சிகள் |
| | மூன்று அறிவு | பாம்புகள், பல்லிகள் |
| | நான்கு அறிவு | பறவைகள் |
| | ஐந்து அறிவு | விலங்குகள் |
| | ஆறு அறிவு | மனிதர்கள் |
| | ஏழு அறிவு | ஈஸ்வரன் |

# எல்லாமாகிய படைப்பு விரிகிறது .... படைப்பின் சூக்ஷ்ம வெளிபாடு

படைப்பு

உயிரினங்கள்/ சேதன வஸ்து

- உணர்வு/அறிவு
- சக்தி/மனம்




| | சக்தி | வெளிபாடு |
|---|---|---|
| உணர்வு | ஆகாயம் | சப்தம் |
| | வாயு | சப்தம்+ஸ்பர்சம் |
| | அக்னி | சப்தம்+ஸ்பர்சம்+ரூபம் |
| | நீர் | சப்தம்+ஸ்பர்சம்+ரூபம்+ரசம் |
| | பூமி | சப்தம்+ஸ்பர்சம்+ரூபம்+ரசம் +கந்தம் |

# எல்லாமாகிய படைப்பு விரிகிறது .... படைப்பின் அசேதன வெளிபாடு


- படைப்பு
  - உயிரற்ற பொருட்கள்/ அசேதன வஸ்து
    - உணர்வு/அறிவு
    - உபாதி/உடல்



பஞ்சீகரணம் என்ற செயல்முறையால், பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உடல்களை உருவாக்கிகொண்டு, உணர்வு தனது அறிவை மனதின் மூலம் **வெளிப்பபடாத** நிலை **“அசேதன”** வஸ்து என வேதாந்த சாஸ்திரம் கூறுகிறது [உதரணமாக: மணல், கல், சவம்].

**குறிப்பு:** கூடுதல் விவரங்களுக்கு ஸ்ரீ பிரபஞ்சநாதன் ஐயா அவர்கள் எழுதிய “பஞ்சீகரணம்” பாடத்தைப் பார்க்கவும்.

# எல்லாமாகிய படைப்பு விரிகிறது .... படைப்பின் வெளி/ஆகாயத்தின் வெளிபாடு






உண்மையில் இடம்/ வெளி என்பது மனத்தில் "ஏற்றிவைக்கபட்ட எண்ணங்கள்" மட்டுமே, அது வெறும் பெயர்/நாமம் என சாஸ்திரம் கூறுகிறது.

"ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதி" என்று வள்ளலார் கூறுகிறார்.

ஏனெனில் பிரபஞ்சத்தின் தொடக்கத்தையும் முடிவையும் இதுவரை விளக்க முடியவில்லை.

விஞ்ஞானிகளோ - விண்வெளி தொடர்ந்து விரிவடைகிறது என்று கூறுகிறார்கள்.

"எனவே வெளி என்பது உணர்வாகவே உள்ளது", இந்த பிரபஞ்சம் அனைத்தும் உணர்வாகிய வெளியில் ஏற்றிவைக்கபட்டதே.

# படைப்பு - உணர்வு, மனம் மற்றும் உடல் மூலம் வெளிப்பட்டது

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| **உணர்வு** | ✔ | ✔ | ✔ | ✔ | ✕ | ✕ | ✕ |
| **மனம்** | ✔ | ✔ | ✕ | ✕ | ✔ | ✕ | ✕ |
| **உபாதி** | ✔ | ✕ | ✔ | ✕ | ✔ | ✔ | ✕ |
| | வ்யக்தம் | வ்யக்தம் | வ்யக்தம் | அவ்யக்தம் | | | |

1 = உயிரினங்கள்/ சேதன வஸ்து (ஒரு  அறிவு முதல் ஏழு  அறிவு வரை)
2 = பஞ்ச  பூதங்கள்
3 = உயிரற்ற  பொருட்கள்/ அசேதன வஸ்து (கல்,மணல், சவம்)
4 = சத்/ இருப்பு நிலை
5/6/7 = உணர்வு  இல்லாமல்  ஒன்றுமில்லை - படைப்பு இல்லை.



பஞ்சபூத கலப்பு செயல்முறைக்கு உட்படாத ஒரு விதை **"அவ்யக்த"** நிலையில் உள்ளது, அது உணர்வு நிலையில் உள்ளது.

ஒரு விதையை பஞ்ச பூதங்களோடு கலந்தால் அது ஒரு செடியாக வெளிப்படும், அது **"வ்யக்தம்/படைப்பு"** எனப்படும்.



# முடிவுரை

| த்ரிபுடி | செயல்பாடு | உதாரணம் |
|---|---|---|
| பார்ப்பான் | உணர்வு | நான் **(சிவம்)** |
| பார்வை | மனம் | மனம் **(சக்தி)** |
| பார்க்கபடும் கருவி | கண் | கண் **(உபாதி)** |
| **பார்ப்பான்+பார்வை+பார்க்கபடும் கருவி = படைப்பு** | | |



பார்ப்பவனாகிய "நான்" இருப்பதினால், பார்வையாகிய சக்தி/மனம் மூலம், பார்க்கபடும் கருவியாகிய கண் மூலம், பார்க்கபடும் பொருளாகிய படைப்பு நிகழ்கிறது, இதனை "**த்ரிபுடி**" என்று சாஸ்திரம் கூறுகிறது.

இதயே, "சிவம் இல்லாமல் சக்தி இல்லை", "சக்தி இல்லாமல் சிவம் இல்லை" என்று சாஸ்திரம் கூறுகிறது.

இந்த பாடலில் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரா தனது "**இருப்பை**" தெளிவாக விளக்கியுள்ளார், அது எப்படி எனில்:

"பிரம்மமாகிய நான் இருப்பதினாலேயே" எது பேசப்பட்டதோ, எழுதப்பட்டதோ, கற்கப்பட்டதோ, பாடப்பட்டதோ, கற்பிக்கப்பட்டதோ, அனுபவிக்கப்பட்டதோ, இவைஎல்லாம், மனமாகிய சக்தியின் மூலமும், உடல் உறுப்புகள் மூலமும் உருவாக்கி படைத்துக்கொள்கிறேன்.

"பிரம்மமாகிய நான் இருப்பதினாலேயே" எது பேசப்படாததோ, எழுதப்படாததோ, கற்கப்படாததோ, பாடப்படாததோ, கற்பிக்கப்படாததோ, அனுபவிக்கப்படாததோ இவை எல்லாம் "எண்ணிடத்தில் உணர்வாகவேயிருக்கிறது".

இப்படி மனதிலும் எண்ணங்களிலும் வலிமையான தீரன் (முமுக்ஷு/மோட்சத்தை விரும்பும் நபர்), எல்லாவற்றிலும் எப்போழுதும் (**ஹம்ச தியானம் = நான் அதுவாகவே இருக்கிறேன்**) இதுவே முக்திக்கு அழைத்துச் செல்லும் பாதை.

**படைப்பு இறைவ(எ)ன் மயம் - இறைவன் மட்டுமே இருக்கிறார், அது நான்தான்!!!**

ஓம் தத் ஸத்